விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 071 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 16 சனிக்கிழமை (28.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# பயங்கரவாதச் சட்டத்தை முற்றாக நீக்குங்கள்



## நீதியமைச்சுக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரும் கையளிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்க வலியுறுத்தி நீதியமைச்சுக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு ஆயிரக்கணக்கான கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டது. (04ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு மண்டலாய் காட்டுப் பகுதியில் யானை ஒன்று திசை மாறி வந்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் மாடுகளை கடத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வீரவாணி பகுதியில் மாடுகளை கடத்திய ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த ஆய்வு மாநாடு




04ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைபுக்கு எதிராக மக்களின் கருத்து சேகரிப்பு யாழில் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபுக்கு எதிராக மக்களின் கருத்தைத் திரட்டி நீதி அமைச்சுக்கு அனுப்பும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் 15ஆம் பக்கம் பார்க்க

## அரச மதமும் தனியார் காணியும் தையிட்டி விகாரையை முன்னிறுத்தி யாழ்.பல்கலையில் கலந்துரையாடல்


யாழ்ப்பாணம்)

தனியார் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை முன்னிறுத்தி "அரச மதமும் தனியார் காணியும்" எனும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் நேற்று வெள்ளிக்கிழமை, பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

வடக்கு-கிழக்கில் சிங்கள பௌத்த மதச் சின்னங்களை முன்னிறுத்திய நில ஆக்கிரமிப்புக்களில் முதன்மையான தையிட்டி விவகாரத்தில் அரச மதத்தை

15ஆம் பக்கம் பார்க்க

## கச்சதீவு அந்தோனியாருக்கு நேற்று கொடியேற்றம்





15ஆம் பக்கம் பார்க்க

## ஒரே நாளில் 725 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் போதைப் பொருளைத் தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கை

04ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரை விவகாரம் பொலிஸார் தாக்கல் செய்த வழக்குகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தையிட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராடி வருகின்ற நிலையில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் கட்டளையை மீறிய இரு உழவு இயந்திரங்கள் மீது கிளிநொச்சியில் துப்பாக்கிச் சூடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற இரு உழவு இயந்திரங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதோடு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் பூநகரி வீதிப் பகுதியில்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபை
## 2026 ஆம் ஆண்டுக்கான பகிரங்க ஏல அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன், மரக்கறிச் சந்தைகளினை 10.03.2026 தொடக்கம் 31.12.2026 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக் கேள்விவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலக் கேள்வியானது 03.11.2025, 26.11.2025, 17.01.2026 ஆம் திகதிய தினக்குரல் மற்றும் வலம்புரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக கோரப்பட்டுள்ளது.

பகிரங்க ஏலக் கேள்வி நடைபெறும் திகதி :- **09.03.2026** (திங்கட்கிழமை) மு.ப **11.00** மணி

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை **2026.03.09** ஆம் திகதி மு.ப **10.30** மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஏலக்கேள்வியின் சித்திகர கேள்விதாரர் ஏலத்தொகையின் 1/3 பங்கினை உடனடியாக செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் முற்பண வைப்புப்பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு சந்தை வழங்கப்படும்.

| தொ இல | சந்தைகளின் பெயர் | ஆகக் குறைந்த பகிரங்க ஏலத் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | 30,921.00 | 5,000.00 |
| 2 | நயினாதீவு மீன் மரக்கறிச் சந்தை | 27,746.00 | 5,000.00 |
| 3 | மண்டைதீவு வாராந்த சந்தை | 9,346.00 | 5.000.00 |
| 4 | வேலணை துறையூர் மீன் சந்தை | 178,011.00 | 5,000.00 |
| 5 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | 103.247.00 | 5,000.00 |

திரு.சி.அசோக்குமார்,
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை. (C-5078) 28.02.2026


## வேலைவாய்ப்பு

எமது காட்சியறைக்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான ஆண்/ பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

- விற்பனைப்பிரநிதி
- காசாளர்
- களஞ்சியப் பொறுப்பாளர்
- களஞ்சிய உதவியாளர்கள்
- விற்பனை உதவியாளர்கள்
- அலுவலக உதவியாளர்கள்
- காட்சியறை முகாமையாளர்

பொருத்தமானவர்கள் 02.03.2026 நேரில் வருகை தரவும்.


(2097)

**Mega Ceramic Mall**
**No.469, K.K.S Road. Jaffna**
**021 221 3903**


## மரண அறிவித்தல்

" பசுமை செம்மல் "

### செல்லையா கோபாலகிருஷ்ணன்



மாலியவத்தை சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கோபாலகிருஷ்ணன் அவர்கள் நேற்று (2026.02.27) வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார் என்பதை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிற்கு அறியத்தருகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

மாலியவத்தை,
சங்கானை. (9643)

தகவல்: குடும்பத்தினர்
076 679 6694


# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD JAFFNA

## 2028 A/L கணித உயிரியல் பிரிவுகள்

நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

### தமிழ்மொழி மூலம்

**PHYSICS**
திரு. N.கபிலன்
திரு. G.பிரபா
திரு. R.ராகுலன்

**CHEMISTRY**
திரு. G.BENO
திரு. S.ரதுசன்

**BIOLOGY**
திரு. K.இராகவன்
திரு. R.குகானந்தன்

**COM.MATHS**
திரு. P. செந்தில்நாதன்
திரு. V.S. சிவகரன்

**AGRICULTURE**
திரு. K. அரசிளங்குமரன்

### ENGLISH MEDIUM

**PHYSICS**
MR.M.KUGANESWARAN
MR.R.RAAKULAN

**CHEMISTRY**
MR.G.BENO

**BIOLOGY**
MR.V.S.GUNASEELAN
MR.R.KABIL

**COM.MATHS**
MR.P.SENTHILNATHAN
MR.V.S.SIVAKARAN

**ICT**
MR.T.SUTHARSAN

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(C-5077)

**ஆரம்பம் : 02.03.2026**

நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 076 566 3006, 076 569 3006, 077 791 7611

f https://Facebook.com/ New Science hall


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளியேறும் பட்டதாரிகளால் முடங்கும் இலங்கை

## ஆய்வில் திடுக்கிடும் தகவல்கள்

**(கொழும்பு)**

**இலங்கையிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளால் பாரிய நெருக்கடி உருவெடுத்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது.**

அரசு பல்கலைக்கழக பட்டதாரிகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவதாக அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

மருத்துவம், பொறியியல் மற்றும் விவசாயம் போன்ற முக்கியமான துறைகளில் வெளியேற்ற வீதம் 80% முதல் 90% வரை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆண்டுதோறும் சுமார் 42,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பயில்கின்றனர் .

குறிப்பாக அறிவியல் சார்ந்த துறைகளில் பட்டம் பெற்ற மிகச்சிறந்த மாணவர்கள் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

மேலும், பல்கலைக்கழகக் கல்விக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 87 பில்லியன் ரூபாய்களை செலவிடுகிறது.

இலங்கையின் 24.5% மக்கள் வறுமையில் வாடும் நிலையில், எமது நாட்டின் வரிப்பணத்தில் உருவான மருத்துவர்களும் பொறியியலாளர்களும் மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றனர்.

இது இலங்கையின் இலவச கல்வியை செல்வந்த நாடுகளுக்கான ஒரு "அபிவிருத்தி உதவித் திட்டமாக மாற்றியுள்ளது" என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பொருளாதார மற்றும் சமூக யதார்த்தங்களே இந்த நிலைக்குக் காரணம் என ஆய்வு கூறுகிறது.

உலகளாவிய சந்தையுடன் ஒப்பிடும்போது அரச மற்றும் தனியார் துறைகளில் வழங்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக உள்ளது.

அத்தோடு, நாட்டின் இறையாண்மை கடன் செலுத்த முடியாமை மற்றும் கொவிட்-19 தாக்கத்தால் ஏற்பட்ட வேலையின்மை. திறமையானவர்களுக்கு தகுந்த வாய்ப்புகளை வழங்க முடியாமல் நாடு ஒரு பொருளாதாரப் பொறிக்குள் சிக்கியுள்ளதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெளியேற்றத்தால் இலங்கையின் சுகாதார மற்றும் கல்வித் துறைகள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால், பணியில் எஞ்சியிருக்கும் ஏனைய தொழில் வல்லுநர்களுக்கு வேலைப்பழு அதிகரித்துள்ளது. இதனால் நாட்டின் சேவை வழங்கல் கட்டமைப்புகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக முதலீட்டை மீளப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு சர்ச்சைக்குரிய ஆலோசனைகள் இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாடு செல்லும் பட்டதாரி ஒருவர் அரசாங்கத்திற்கு 10,000 - 15,000 அமெரிக்க டொலர்களை மீளச் செலுத்த வேண்டும் அல்லது புலம் பெயர்ந்தவர்கள் தமது குடும்பங்களுக்கு குறைந்தது 50, 000 அமெரிக்க டொலர்களை பணமாக அனுப்ப வேண்டும்.

எவ்வாறாயினும், இவ்வாறான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் சிக்கல்கள் இருப்பதாகவும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# கிளினிக் சேவைகளிலிருந்து விலக அரச வைத்திய அதிகாரிகள் தீர்மானம்




(கொழும்பு)

விசேட மருத்துவ சேவையொன்றை நிறுவுதல் உள்ளிட்ட தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் முறையான பதிலை வழங்காத காரணத்தினால், நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வைத்தியசாலைகளின் கிளினிக் நடவடிக்கைகளில் இருந்து விலக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 50 கிளினிக் நிலையங்கள் மற்றும் நடமாடும் கிளினிக் அமைப்புகள் என்பன அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் என அந்த சங்கத்தின் செயலாளர் பிரபாத் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஆரம்ப சுகாதார சேவையை பராமரிக்க பணியாளர்கள் பற்றாக்குறை உள்ள சூழலில் இதுபோன்ற திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில்லை என்று வைத்தியர்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது அரசாங்க அதிகாரிகள் முறையான தலையீடுகளை மேற்கொள்ளாத பட்சத்தில், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஒரு முழுமையான வேலை நிறுத்தப் போராட்டமாக மாறக்கூடும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் பிரபாத் அத்தநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

## உ/த பரீட்சையின்

# செய்முறைப் பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)


2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கான செய்முறைப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகளை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, பொறிமுறைகள் தொழிநுட்பவியல் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி முதல், 15 ஆம் திகதி வரையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டியம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# 'பொடி லெசி' நாட்டிற்கு அழைத்து வரப்பட்டார்



(கொழும்பு)

திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான "பொடி லெசி" என்றழைக்கப்படும் அருமாஹந்தி ஜனித் மதுசங்க டி சில்வா நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து விசேட பொலிஸ் குழுவினரால் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அவர் அழைத்து வரப்பட்டுள்ளார்.

இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச பொலிஸாரின் தலையீட்டின் மூலம் இந்திய பாதுகாப்புப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

2024ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி பிணையில் விடுதலையானதன் பின்னர், கடல் மார்க்கமாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற பொடி லெசி, 2025 ஜனவரி மாதம் மும்பையில் வைத்து, பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அதன்படி, நேற்று அதிகாலை 5.55 மணியளவில் மும்பையிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் UL-142 விமானம் மூலம் அவர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் பலத்த பாதுகாப்புடன் எல்பிட்டிய பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி)

## 'டித்வா'வால் பாதிக்கப்பட்ட

# பல்கலை மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில்

(கொழும்பு)

"டித்வா" சூறாவளியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல நிதியத்தால் விசேட புலமைப்பரிசில் ஒன்றை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்வி உதவித்தொகை அறக்கட்டளை நிதியத்தின் அறங்காவலர் குழு இந்த சிறப்பு உதவித் தொகை திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

வர்த்தக, வணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சு இந்த விசேட புலமைப்பரிசில் தொகை தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

விசேட புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மஹாபொல வலைத்தளமான www.mahapola.lk மூலமும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது குறித்த கூடுதல் தகவல்களைக் கொண்ட லலித் அதுல்முதலி மஹா பொல உயர்கல்வி உதவித் தொகை அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி விஜித் கே.மலல்கொட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளில்...

களில் 725 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக் காவல் உத்தரவு பெற்ற 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை 738 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் 3 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய சந்தேகநபர்களிடமிருந்து 713 கிராம் ஹெரோயின், 01 கிலோகிராம் 99 கிராம் ஐஸ், 2 கிலோகிராம் 246 கிராம் கஞ்சா, 56 ஆயிரத்து 27 கஞ்சா செடிகள், 369 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 62 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 2 ஆயிரத்து 552 போதை மாத்திரைகள், 141 கிராம் 670 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 600 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## சைவ சித்தாந்த...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவசித்தாந்தத்துறையும், உயர் பட்டப் படிப்புகள் பீடமும் இணைந்து நடாத்தும் முதலாவது சர்வதேச சைவசித்தாந்த ஆய்வு மாநாடு - 2026 நேற்று வெள்ளிக்கிழமை (27) காலை 09.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கூவர் கலையரங்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான திருநாவுக்கரசு வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மங்கல விளக்கேற்றல், நந்திக் கொடியேற்றல் மற்றும் திருமுறைப் பாராயணத்துடன் ஆரம்பமான நிகழ்வில் சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைத் தலைவர் பேராசிரியர் நல்லூர் சா.சரவணன் நிகழ்நிலையில் கலந்து கொண்டு ஆதார சுருதி உரை ஆற்றினார்.

மாநாட்டின் முக்கிய அம்சமாக ஆய்வரங்கக் கட்டுரைக் கோவையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா வெளியிட்டு வைக்க சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து சமகாலத்தில் சைவம் மற்றும் சைவசித்தாந்தப் பணிகளில் தம்மை அதிகம் ஈடுபடுத்தி வரும் கலாநிதி ஏரம்ப மூர்த்தி அனுசாந்தன், அகில இலங்கை சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், மருத்துவர் கி.பிரதாபன் ஆகியோர் விசேட விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ம-7,104)

## பயங்கரவாதச்...

தற்போது நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் பெயரிலான புதிய வரைவை அரசாங்கம் முன்மொழிந்திருக்கிறது. அச்சட்ட வரைபு பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அனுப்பிவைப்பதற்கு பொது மக்களுக்கு நீதியமைச்சினால் வழங்கப்பட்டிருந்த இரண்டு மாத கால அவகாசம் இன்றுடன் (28) முடிவடைகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இக்கருத்தறியும் காலப்பகுதி அறிவிக்கப்பட்டது முதல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் எனவும், புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபை வாபஸ் பெறவேண்டும் எனவும் வலியுறுத்தி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் இணைந்து நாடளாவிய ரீதியில் பல்வேறு கலந்துரையாடல்கள், விழிப்புணர்வூட்டல் கூட்டங்கள், எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஓரங்கமாக சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சுக்கு முன்பாக கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி தொடர் கவனயீர்ப்புப் போராட்ட பிரசாரமொன்றை ஆரம்பித்திருந்தன. பொது மக்களின் கருத்தறியும் காலப்பகுதி இன்றுடன் (28) நிறைவடையும் நிலையில், அத்தொடர் கவனயீர்ப்புப் போராட்ட பிரசாரத்தின் இறுதிப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை (27) மு.ப 11.00 - பி.ப 1.00 மணி வரை நீதியமைச்சுக்கு முன்பாக நடைபெற்றது.

இப்போராட்டத்தில் மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், மதத் தலைவர்கள் உள்ளடங்கலாகப் பொது மக்கள் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

அத்தோடு "அடக்குமுறைகளுக்கு எதிராக அணிதிரள்வோம்", "பயங்கரவாதத்தடைச்சட்டத்தைக் கிழித்தெறிவோம்", "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபுக்குத் தடைவிதிப்போம்", "நீதிக்காகத் துணையிருப்போம்", "உரிமைகளை வென்றெடுப்போம்", "விடிவுக்காக செயற்படுவோம்", "நமக்காகக் குரல்கொடுப்போம்" என்றவாறு பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அதற்குப் பதிலீடாகப் புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் சட்ட வரைபு என்பவற்றுக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். (ம-7)


## தேவை

- மிக்சர் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் (ஆண்/பெண்)
- மில் வேலை தெரிந்தவர்கள் (ஆண்/பெண்)
- உதவியாளர்கள் (ஆண்/பெண்)

தொடர்புகளுக்கு:

(2100)

076 440 0816



## மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 07 - 1938



மறைவு
26 - 02 - 2026

### இளையதம்பி திருநாவுக்கரசு
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி திருநாவுக்கரசு அவர்கள் நேற்று முன்தினம் (26.02.2026) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சுந்தரம் தம்பதியரின் பாசமிகு மகனும் சரவணமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மங்களநாயகி அவர்களின் அன்புக் கணவரும் யாழினி (பிரதேச செயலகம் உடுவில்), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமார் (ஆசிரியர் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சாவித்திரி, சிவலோகநாதன், இராசேந்திரம் மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாதம் - தெய்வநாயகி, இந்திரன் - இராசநாயகி, சத்தியராஜன் - செல்வநாயகி, ஜெயந்தன் - வசந்தா, வாகீசன் - சுசீலாதேவி மற்றும் காலஞ்சென்ற கதிரவேல், இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சகலனும் ரிஷிபவன் (மாணவன் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), அகிலேஷ் (மாணவன் Imperial பல்கலைக்கழகம்), கவின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல் : குடும்பத்தினர்

(2101) T.P - 021 224 2875, 076 967 4206



### கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ்.கிளை நடாத்தும்

### ஸ்தாபக தின நிகழ்வு
(ஸ்தாபிதம் 01.03.2002)

### அழைப்பிதழ்

இடம் :- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் :- 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணி



தலைமை
திரு.ச.இராசநாயகம் அவர்கள்
(உப தலைவர் கிழவன்காடு கலாமன்றம்)
பிரதம விருந்தினர்
பேராசிரியர் சி.சிறிசற்குணராசா அவர்கள்
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் சிவராணி சிறிசற்குணராசா அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் மொழியியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



### நிகழ்ச்சிகள்

ஸ்தாபக தின உரை
கௌரவிப்புரை :- திரு.த.ஹொபேட் அருட்சேகரன் (பீடாதிபதி சேர்.பொன்.இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
சிதம்பரஜோதி உயர்விருது வழங்கல்
இசைக்கச்சேரி :- "நுண்கலைமாணி" திரு.புலேந்திரன் கோபிசாந் குழுவினர் (கலாமன்ற இசை ஆசிரியர்)
நாட்டியாஞ்சலி :- "நாட்டியமயில்" ஸ்ரீமதி.பவித்திரா வசந்தரூபன் குழுவினர் (போதனாசிரியர், நடனத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்புப் பட்டிமண்டபம் :- "தலைப்பு"
"இன்றைய இளைய தலைமுறையினரிடத்து பெரிதும் கட்டி எழுப்ப வேண்டியது"

அறிவியல் புரட்சியே!
திரு.வேல்.நந்தகுமார்
திரு.கு.குமரேசன்

நடுவர்
இலக்கியச் செம்மல்
பரா.ரதீஸ் (அமைப்பாளர், அகில இலங்கை இளங்கோ கழகம்)

பண்பாட்டு விருத்தியே
திரு.கோ.கோகிலரதன்
திரு.பரா.றமேஸ்



"சிதம்பரஜோதி" உயர்விருது பெறுவோர் - 2026
சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன் அவர்கள்
(ஓய்வுநிலை இசை ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ் கிளை

(C-5079)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் தன் கடமையை செய்யும் போது அச்சமடைந்து கூச்சலிடும் எதிர்க்கட்சிகள்

## அமைச்சர் சமந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சட்டம் தன் கடமையைச் செய்யும்போது எதிர்க்கட்சியினர் ஏன் அச்சப்படுகின்றனர் என அமைச்சர் சமந்த வித்யாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் போது ஏற்படும் அச்சத்தையே எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டு வெளிப்படுத்தி வருகின்றனர் என்றும், அவற்றை அரசு ஒருபோதும் பொருட்படுத்தாது என்றும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சிகள் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு பேசுபொருள்களை உருவாக்கி அரசின் மீது வீணான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றது.

கடந்த ஆண்டு கொள்கலன்கள் குறித்துப் பேசினார்கள். இப்போது வேறு விடயங்களைக் கையில் எடுக்கின்றார்கள். அவர்களால் முன்வைக்கப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் நாம் பாராளுமன்றத்தில் தகுந்த பதிலளித்துள்ளோம்.

குறிப்பாக, நிலக்கரி விவகாரத்தில் எவ்வித மோசடியும் இடம்பெறவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அனைத்துத் தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களைப் போலன்றி, தற்போது நீதித்துறை சுயாதீனமாக்கப்பட்டுள்ளதால் அரசியல் தலையீடுகள் இன்றி எவரும் சட்டத்தை நாட முடியும். சமையல் எரிவாயுப் பிரச்சினை ஏற்பட்ட போது, மிகக் குறுகிய காலத்தில் அதற்குத் தீர்வை வழங்கினோம்.

அரசின் மீதான மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருவதுடன், ஊழல் மற்றும் மோசடிகள் ஒழிக்கப்பட்டு பொருளாதாரம் சீரான பாதையில் பயணிக்கின்றது அரசின் இந்த வெற்றிகரமான பயணத்தால் எதிர்க்கட்சிகளின் அரசியலுக்கு இடமில்லாமல் போயுள்ளது.

இதன் காரணமாகவே, சட்டம் தன் கடமையைச் செய்யும்போது அவர்கள் அச்சமடைந்து கூச்சலிடுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# எரிவாயுவுடன் மேலுமொரு கப்பல்




(கொழும்பு)

3,700 மெட்ரிக் தொன் எல்.பி எரிவாயுவை ஏற்றியுள்ள மேலும் ஒரு கப்பல் இன்று நாட்டை அடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்ததாவது, இந்த கப்பல் வருகையுடன் இம்மாதம் இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட மொத்த எரிவாயு அளவு 28,000 மெட்ரிக் தொன்களை கடந்துள்ளது.

இந்த கையிருப்பின் விநியோகம் இன்று காலை முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் நிறுவனம் உறுதி செய்துள்ளது.

மேலும், தினசரி சந்தைக்கு விடப்படும் எரிவாயு அளவை 1,200 மெட்ரிக் தொன்னிலிருந்து 1,700 மெட்ரிக் தொன்னாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தொடர்ந்து நிலையான விநியோகத்தை உறுதி செய்ய கூடுதலாக நான்கு கப்பல்கள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (நி)

## பாடசாலை மாணவர்களுக்கான

# பாதணி வவுச்சர்களின் செல்லுபடிக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள், பிரிவெனாக்களில் கல்வி பயிலும் இல்லற மற்றும் துறவற மாணவர்கள் 3,000 ரூபா பெறுமதியான பாதணி வவுச்சர்களை வழங்கும் திட்டத்தின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த வவுச்சர்களின் செல்லு படியாகும் காலம் இன்றுடன் நிறைவடையவிருந்த போதிலும், தற்போது அதன் செல்லுபடியாகும் காலம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை, ஜாதகம், கைரேகை, எண்கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

(C-5071)

074 196 4945

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு மணியர் பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான விசேட மகாசபை பொதுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (3)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 02 - 1951



மறைவு 25 - 02 - 2026

### பத்மநாதன் அருந்தவம்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் அருந்தவம் அவர்கள் 25.02.2026 புதன்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - சித்திரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா- தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவரான பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன்(பொலிஸ்) (சந்திரி), சொக்கலிங்கம் (பிரான்ஸ்), தில்லையம்பலம் மற்றும் கணேசர்(கணேஸ்) குப்பிளான் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பகீறதி(கனடா), பகீரதன்(பிரான்ஸ்), பிரபாகரன்(சுவிஸ்), கிருபாகரன்(கனடா), றஞ்சனா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கருணாமூர்த்தி மற்றும் சத்தியமலர்(பிரான்ஸ்), பாமினி(சுவிஸ்), கௌரி(கனடா), பிரதீபன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனுஷன், லக்ஷி (கனடா)ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் தர்சன், பிறேமினி, சபறேசன், சாரங்கா, தர்ஷி(பிரான்ஸ்), அபிரா, தாரகா, மதுரா, விதுரா(சுவிஸ்), கல்கி, துளசி(கனடா), ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2026 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காடாகரம்பை (குப்பிளான்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

077 500 0919

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

(C-5072)

## டித்வா சூறாவளி

# நிவாரண பணிகளை துரிதப்படுத்துமாறு பணிப்பு

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங் கும் பணியை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் 16ஆவது அமர்வின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று, முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

டித்வா சூறாவளியினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பல் வேறு பொறுப்புகள் மற்றும் திட்டங்கள் உள்ளதாகவும் அந்த அனைத்து நிறுவனங்களும் இந்தத் தருணத்தில் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரணப் பணிகளை மிகவும் திறமையாகவும் பயனுள்ளதாகவும் முன்னெடுக்க முடியும் என ஜனாதிபதியின் செயலாளர் இதன் போது சுட்டிக் காட்டினார்.

அனைத்து நிறுவனங்களும் ஒரே நோக்கத்திற்காக, ஒரு கட்டமைப்பாகச் செயற்பட்டு, சரியான தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவான நிவாரணத்தை வழங்க முடியும் எனத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர், இதற்காகத் துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.


வீட்டுத்திட்டப் பணிகளைத் துரிதப்படுத்துவது குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் விசேட கலந்துரையாடலை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங் கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை விரைவாக வழங்கி முடிக்குமாறும், இதுவரை கொடுப்பனவுகள் கிடைக்காத மக்களின் மேன்முறையீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியின் செயலாளர் அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை உறவு மேலும் வலுவடைந்துள்ளது

## இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

**இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடைந்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினம் மற்றும் இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினம் ஆகியவற்றை முன்னிட்டு, இலங்கை - இந்தியச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த விசேட கொண்டாட்டத்துடன் கூடிய இராப்போசன விருந்து, நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது, இலங்கை - இந்தியச் சங்கத்தின் உத்தியோகபூர்வ சஞ்சிகை வெளியீடு மற்றும் "Port of Call" எனும் நூலினைப் பிரதமர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்பின்னர் உரையாற்றிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா,

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது வெறும் இராஜதந்திர மட்டத்துடன் மட்டுப்படுத்தப்படாது, அதற்கு அப்பால் சென்ற ஒரு பலமான, அதேவேளை விசேடமான உறவாகும்.

இந்தியாவிற்கு வெளியே வழங்கப்படும் முதலாவது சர்வதேசப் பட்டப்படிப்பை இலங்கையில் அறிமுகப்படுத்தியதன் மூலம் கல்வித் துறையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தகவல் தொடர்பாடல் மற்றும் மக்களிடையிலான உறவுகள் போன்ற பல துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்திய - இலங்கை உறவுகளில் இன்றைய காலகட்டத்தில் ஒரு பாரிய முன்னேற்றம் காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தூதுவர்கள், இராஜதந்திர அதிகாரிகள், இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி)

# இளம் வயதினரிடையே கணிசமாக அதிகரிக்கும் குடல் புற்றுநோய்கள்



(கொழும்பு)

இலங்கையில் 30 முதல் 50 வயதுக்கு இடைப்பட்ட நபர்களிடையே பெருங்குடல் மற்றும் நேர்க்குடல் புற்றுநோய்கள் அதிகரித்து வருவது குறித்து சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது ஒரு உலகளாவிய போக்கின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முன்னர் 50 வயதிற்கு மேற்பட்டவர்களிடையே அதிகமாகக் காணப்பட்ட இந்தப் புற்றுநோய் பாதிப்புகள், அண்மைக் கால தரவுகளின்படி இளம் வயதினரிடையே கணிசமாக அதிகரித்து வருவதை வெளிப்படுத்துகின்றன.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த தேசிய புற்றுநோய் தடுப்புத் திட்டத்தின் சமூக மருத்துவ விசேட நிபுணர் மருத்துவர் ஹசரலி பெர்னாண்டோ, இந்த புதிய மாற்றமானது பொது சுகாதாரத்திற்கு ஒரு பாரிய சவாலாக அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு ஆரம்பக் கட்டப் பரிசோதனைகள், சரியான நேரத்தில் நோயைக் கண்டறிதல் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை மிகவும் அவசியம் என அவர் வலியுறுத்தினார்.


அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் தாமதிக்காது மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும், ஆரம்பக்கால அறிகுறிகள் குறித்து அவதானமாக இருக்குமாறும் மருத்துவர் பெர்னாண்டோ பொது மக்களை வலியுறுத்தியுள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3358

**சுவஸ்திகா**




**பிரதீபா**




**விமல்**




**சுலக்சன்**




**சங்கர்**




**சுகிர்தா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக புத்தூரில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**அரசினால் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் என சகல அடக்குமுறைச்சட்டங்களையும் உடனே அரசாங்கம் மீளப் பெறவேண்டும் என வலியுறுத்தி புத்தூரில் நேற்று முன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது**



புத்தூர் பிரதேச சபையின் முன்பாக தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் ஒன்று கூடிய பிரதேச சபையின் உறுப்பினர் கள் எதிர்ப்பு பதாகைகளை வீதியில் காட்சிப்படுத்தி, அரசு நடைமுறையில் உள்ள பயங் கரவாதத் தடைச் சட்டத்தினை யும் நீக்க வேண்டும் என கோசம் எழுப்பியதுடன் புதிய அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தினையும் நீக்க வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத் தில் கைதான தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுவிக்க வேண்டும், அடக்கு முறைச் சட்டங்கள் ஜனநாயக விரோதமானவை என கோசம் எழுப்பினர். மேலும் அநுர அரசு தேர்தல் காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத் தினை நீக்குவேன் எனக் கூறி வழங்கிய வாக்குறுதிகள் எங்கே? எனவும் கேள்வி எழுப்பினர்.


இப்போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி விழிப் புணர்வை ஏற்படுத்துமுகமாக கிராமம் கிரா மமாக மக்களை சந்திக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

ஆலய பரிபாலன, தர்ம கர்த்தா சபையினர் பயன்பெறும் வகையில் அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் ஞாபகார்த்த நினைவுப் பேருரை நிகழ்வானது நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் அகில இலங்கை இந்து மாமன்ற கோவில் வீதி, யாழ் பிராந்திய அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுக உரையினை பொறியியலாளர் ச.சந்தோஷன், நினை வுப் பேருரைகளை, தர்ம நம்பிக்கை பொறுப்புகள் பற்றிய சட்ட அறிமுகம் எனும் தலைப்பில் சட்டத்தரணி ஜோ. சிவராம சர்மா மற்றும் ஆலயங்களின் பரிபாலனம் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் சட்டத்தரணி கு. குருபரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதாக அகில இலங்கை இந்துமா மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (3)



யாழ்.பொது நூலக நிறுவுநர் கனகசபை முதலித்தம்பியார் செல்லப்பாவின் 130 ஆவது ஜனன தினம் யாழ்.பொது நூலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

# கலைக்கூடல் நிகழ்வும் சிறுவர் நாடகமும்

(யாழ்ப்பாணம்)

சங்கத்தானை பகுதியில் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் கலைத் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாதாந்தம் இறுதி சனிக்கிழமைகளில் "கலைக் கூடல்" என்ற சிறப்பு கலை நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீ முருகன் முன்பள்ளி, சங்கத்தானையில் நடைபெறவுள்ளது.

கலை, கலாசாரம் மற்றும் சமூக ஒற்றுமையை வளர்க்கும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், "தவிக்கும் தாத்தா" எனும் சிறுவர் நாடகம் மேடையேறவுள்ளது. சிரிப்பும் சிந்தனையும் இணையும் இந் நாடகம் குடும்ப உறவுகள் மற்றும் சமூகப் பொறுப் புணர்வை எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளது.

இந்த கலைவிழா சிறுவர்கள் மட்டுமன்றி, இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கும் தங்கள் திறமைகளை வெளிப் படுத்த ஒரு அரிய வாய்ப்பாக அமையும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், கலை ஆர்வலர் கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். (3)

## கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபக தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் ஸ்தாபக தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

கிழவன்காடு கலாமன்ற உப தலைவர் ச.இராசநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி. சிறிசற்குணராசா, யாழ். பல்கலைக்கழக மொழியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிவராணி சிறிசற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# ஓமந்தையில் இரு பாரவூர்திகள் மோதி கோர விபத்து

## இருவர் காயம்



(வவுனியா)

வவுனியா ஓமந்தை பகுதியில் இரு பாரவூர்திகள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றிருந்ததுடன் ஏ-9 வீதியின் போக்குவரத்தும் சுமார் 3 மணி நேரம் தடைப்பட்டதுடன்நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்து நின்றதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

வவுனியாவில் இருந்து யாழ் நோக்கி எருவுடன் பயணித்த பாரவூர்தி ஓமந்தை பகுதியிலே பழுதடைந்திருந்த நிலையில் தரித்து நின்றுள்ளது.

இந்நிலையில் குறித்த பாரவூர்தியினை பழுது பார்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் போது யாழ் நோக்கி பயணித்த பிறிதொரு பாரவூர்தி குறித்த பாரவூர்தியின் பின் பகுதியில் மோதியதாலேயே இவ் விபத்தானது இடம்பெற்றிருந்தது.

மேலும் இவ் விபத்தானது அதிக பனிமூட்டம் காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதுடன், மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# பருத்தித்துறையில் அதிகரித்துள்ள கட்டாக்காலி தெருநாய்கள்

## பொதுமக்கள் விசனம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதான வீதியோரமாக உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகத் திரியும் தெருநாய் ஒன்று கடந்து செல்பவர்களைப் பின்னால் பாய்ந்து கடித்து வருகிறது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இவ்வாறு ஐந்து பேரை கடித்துள்ளது. இவ்வாறு தெரு நாய் கடிக்குள்ளானவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பருத்தித் துறை நகர் பகுதியில் பரவலாக தெரு நாய்களின் நடமாட்டம் காணப்பட்டு வருகிறது.

வீதியோரமாக சுற்றித் திரியும் நாய்கள் வீதியால் செல்லும் பொது மக்களையும் வாகன ஓட்டிகளையும் திடீர் திடீர் என கலைத்து கடிக்க முற்பட்டு வருகின்றன. இதனால் வாகன விபத்துகளும் ஏற்பட்டு வாகன ஓட்டிகள் காயங்களுக்கு உள்ளாகி வருவதுடன் வாகனங்களும் சேதமடைந்து வருகின்றன.

நீண்ட நாட்களாக இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் தெரு நாய்களினால் தொல்லை ஏற்பட்டு வருகையில் அவற்றை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது உள்ளமையால் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி.மு.கவில் இணைந்த ஓ.பன்னீர் செல்வம்



## உச்சகட்ட பரபரப்பில் தேர்தல் களம்

(சென்னை)

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று தி.மு.கவில் இணைந்துள்ளார்.

ஓ.பி.எஸ் தி.மு.கவில் இணைந்துள்ளது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்துள்ளார். அவரது மகன் ரவீந்திரநாத், உசிலம்பட்டி எம்.எல்.ஏ அய்யப்பன் உள்ளிட்ட அவரது ஆதரவாளர்களும் திமுகவில் இணைந்துள்ளனர்.

தமிழகத்தில் விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதால், அரசியல் களம் சூடுபிடிக்க தொடங்கியுள்ளது.


திராவிட முன்னேற்ற கழகம், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், நாம் தமிழர் கட்சி, நடிகர் விஜயின் தமிழக வெற்றி கழகம் என இந்த முறை 4 முனை போட்டி நிலவுகிறது.

இப்படி சூடுபிடித்துள்ள நிலையில் முன்னாள் முதலமைச்சரான ஓ.பன்னீர் செல்வம் எந்த கூட்டணியில் சேர போகிறார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. (நி)

## மத்திய கிழக்கில் போர்

## ஈரானுக்கு 15

## அவகாசம்



(வோஷிங்டன்)

**"பயங்கரவாதத்தின் முதன்மை பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க குள் ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் என அமெரிக்கா ஜனாதிபதி டொனா**

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே ஜெனீவாவில் மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் பிடி கொடுக்காத ஈரானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது தாக்குதல் நடத்தின.

இதையடுத்து, மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது படைகளைக் குவித்து இராணுவப் பலத்தைக் கணிசமாக அதிகரித்துள்ளது.

இதனிடையே, அரபு நாடுகள் கேட்டுக்கொண்டதன்

பேர்
வார்
பித்து
ஈரா
தலை
லில்
றத்
கருத்

## தென்கொரியாவை தரைமட்டமாக்குவோம்!

## வடகொரியா ஆவேசம்



(பியாங்யாங்)

எங்களைத் தாக்கினால், எங்களின் அணு ஆயுத பலத்தைக் கொண்டு தென்கொரியாவை முழுமையாக அழிப்போம்.

எங்களை ஒடுக்க நினைக்கும் "விரோதப் போக்கு" கொள்கைகளை அமெரிக்கா கைவிட்டால். அவர்களுடன் கைகோர்க்க நாங்கள் தயார் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து கூட்டு இராணுவ பயிற்சியை அடுத்த மாதம் 9 ஆம் திகதி தொடங்க இருக்கின்றனர்.

இந்நிலையில் வடகொரியாவின் ஆளுங்கட்சியான **தொழிலாளர் கட்சியின் 9** ஆவது மாநாடு பியாங்யாங் நகரில் கடந்த 7 நாட்களாக கோலாகலமாக நடைபெற்றது.

இந்த மாநாட்டின் நிறைவு நாளில் கிம் ஜாங் உன் பேசிய உரை, உலக நாடுகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர் பேசியதாவது தென்கொரியா எங்களின் தீராத எதிரி நாடு. அந்த நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்த இனி எதுவுமே இல்லை. ஒரே நாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. எங்களைத் தாக்கினால், எங்களின் அணு ஆயுத பலத்தைக் கொண்டு தென்கொரியாவை முழுமையாக அழிப்போம்.

அடுத்த 5 ஆண்டுகளில் தென்கொரியாவை குறிவைக்கும் வகையிலான நவீன ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை தயாரிப்பதே எங்கள் இலக்கு.

அதே நேரத்தில், அமெரிக்காவுடன் நாங்கள் சுமூகமான உறவை மேற்கொள்ள விரும்புகிறோம். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை உள்ளது. வடகொரியாவை அணு ஆயுத நாடாக அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும். எங்களை ஒடுக்க நினைக்கும் "விரோதப் போக்கு" கொள்கைகளை அமெரிக்கா கைவிட்டால். அவர்களுடன் கைகோர்க்க நாங்கள் தயார்.

அமெரிக்காவுடனான உறவு அவர்களின் கைகளில்தான் உள்ளது. அமைதியாக வாழ்வதா அல்லது மோதிக் கொள்வதா என்பதை அவர்களே முடிவு செய்யட்டும். இவ்வாறு கிம் ஜாங் உன் ஆவேசமாக பேசினார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற பிரம்மாண்ட இராணுவ அணிவகுப்பில், கிம் ஜாங் உன் தனது 13 வயது மகள் கிம் ஜூ ஏ-வுடன் கலந்து கொண்டார்.

இது அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு கிம் ஜாங் உன் தயாராக இருப்பதையே காட்டுகிறது என அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

தண்ணீருக்கு அடியிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள், செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் ட்ரோன்கள் மற்றும் விண்ணில் உள்ள எதிரி நாட்டு செயற்கைக்கோள்களைத் தாக்கி அழிக்கும் ஆயுதங்களை அடுத்த 5 ஆண்டுகளில் தயாரிக்கப் போவதாக கிம் அறிவித்துள்ளார்.

தென்கொரியாவை எதிரியாக அறிவித்துவிட்டு, அமெரிக்காவுடன் மட்டும் பேச்சுவார்த்தைக்கு கதவைத் திறந்து வைத்துள்ள கிம் ஜாங் உன்னின் இந்த புதிய பாதை ஆசிய பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ...ார் மேகங்கள் ...15 நாட்கள் ...ம் வழங்கிய ட்ரம்ப்

**...முதன்மை ஆதரவாளரான ஈரான் அணு ஆயுதம் ...னுமதிக்க மாட்டேன். அடுத்த பத்து முதல் 15 நாட்களுக் ...விட்டால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" ... டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

...நடத் ...ந்திய ...னது ...இரா ...மாக ...நாடு ...தன்

பேரில் ஈரானுடன் பேச்சு வார்த்தையை அமெரிக்கா ஆரம் பித்துள்ளது.

எப்போது வேண்டுமானாலும் ஈரான் மீது அமெரிக்கா தாக்கு தலைத் தொடங்கும் என்ற சூழ லில் அமெரிக்க பாராளுமன் றத்தில் ட்ரம்ப் இது குறித்துக் கருத்து தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் பெறுவதை அனுமதிக்க முடியாது. அடுத்த 10-15 நாட்களுக்குள் ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் கடும் விளைவுகளை ஈரான் சந் திக்கும் எனத் தெரிவித் தார்.

இப்படிப்பட்ட சூழலில், நடைபெறும் பேச்சு வார்த்தையின் முடிவு போரைத் தவிர்க்குமா அல்லது நேரடி மோத லுக்கு வழிவகுக்குமா என்பதை உலக நாடு கள் உன்னிப்பாகக் கவ னித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



## பட்டம் பெற ரோபோவை அனுப்பிய மாணவி

(பீஜிங்)

சீனாவில் ஒரு மாணவி தனது பல்கலைக்கழகத் திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கிய மனித உரு வம் போலியிருக்கும் ரோபோ மூலம் தனது பட்டத்தை பெற்றுள்ளார்.

இந்த ரோபோ, மாணவி யின் சார்பாக, பட்டமளிப்பு விழாவில் தன்னுடைய டிப் ளோமாவைப் பெற அனு ப்பப்பட்டுள்ளது.

இந்தப் படைப்பு வழக்கத் திற்கு மாறான செயலால் ஒன்லைனில் கவனத்தை ஈர்த்தது மற்றும் கல்வி யில் தொழில்நுட்பத் தின் எதிர்காலம் பற்றிய விவாதங்களைத் தூண்டி யது.

இதன் மூலம் ரோபோட் டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த சாத்தியமான செயற்பாடு மாணவியின் பொறியியல் திறனையும், தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி புதுமையான தீர்வு களை உருவாக்கும் திற னையும் காட்டுகிறது.

அத்துடன், ரோபோக்கள் அன்றாட வாழ்க்கையில், கல்வியிலும், தொழில்துறை யிலும் எவ்வாறு வலுவான செல்வாக்கை ஏற்படுத்தக் கூடும் என்பதையும் எடுத் துக்காட்டுகிறது.

இந்தத் தருணம், தொழில் நுட்பத்தின் எதிர்காலத்தில் நேரடி கற்றலும், புதுமை யான கண்டுபிடிப்புகளும் எவ்வளவு முக்கியமானவை என்பதைக் வெளிக்காட்டு கின்றது. (நி)



...நுண் ...ங்கும் ...ணில் ...செயற் ...அழிக் ...ந்த 5 ...போவ ...ரியாக ...வுடன் ...த கத ...கிம் ...புதிய ...த்தில் ...தியுள் (நி)



## உலக நாடுகளை ஆச்சரியப்படுத்திய ஜப்பானின் நவீன ஆன்மிகப் புரட்சி

(டோக்கியோ)

ஜப்பானில் நிலவி வரும் மனி தத் துறவிகள் பற்றாக்குறையை ஈடுகட்ட, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய "ரோபோ" துறவியை கியோட்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியா ளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

புத்த மதத்தின் மிகக் கடின மான புனித நூல்களை கூட இந்த ரோபோ கற்றுத் தேர்ந்துள்ளது. மனிதர்களிடம் வெளிப்படையாக கூறத் தயங்கும் தனிப்பட்ட மற்றும் உணர்ச்சிகரமான கேள்விக ளுக்கு இது தெளிவான பதில் களை வழங்குகிறது. தத்ரூபமாக மனிதத் தோற்றத்தில் வடிவ மைக்கப்பட்டுள்ள 2 கால்களை கொண்ட இந்த ரோபோ, கோவில்களில் மந்திரங்களை ஓதுவதுடன் மதச்சடங்குகளையும் மேற் கொள்ளும் திறன் கொண் டது.

எதிர்காலத்தில் மனிதத் துறவிகளுக்குப் பதிலாக இந்த ரோபோ துறவிகளே ஆன்மிகப் பணிகளை முன் னின்று நடத்தும் என ஆரா ய்ச்சியாளர்கள் தெரிவித்துள் ளனர். ஜப்பானின் இந்த நவீன ஆன்மிகப் புரட்சி உலக நாடுகளை ஆச்சரிய த்தில் ஆழ்த்தியுள்ளது. (நி)

## 7,667 புலம்பெயர் அகதிகள் கடந்த ஆண்டில் உயிரிழப்பு

### ஐ.நா.தகவல்



(ஜெனீவா)

கடந்த ஆண்டில், உல கம் முழுவதும் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர முயன்றவர்களில் 7,667 பேர் உயிரிழந்ததோடு, பலர் மாயமாகியுள்ளதாக ஐ.நா. வின் சர்வதேச புலம்பெயர் அமைப்பு தெரி வித்துள் ளது.

சட்டப்பூர்வ புலம்பெயர்வு க்கான வாய்ப்புகள் குறை ந்ததால், மக்கள் ஆள் கடத்தல் கும்பல்களின் பிடியில் சிக்கி இத்த கைய ஆபத்தான பயண ங்களை மேற்கொள்கின்ற னர்.

குறிப்பாக, மத்திய தரைக்கடல் உட்பட அபாயகரமான கடல் வழித்தடங்களில் அதிக இறப்புகள் நிகழ்ந்துள் ளன.


2024 இல் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 9,200 ஆக இருந்த நிலை யில், 2025 இல் அது 7,667 ஆகக் குறைந்து ள்ளது.

இருப்பினும், இது முன் னேற்றத்தினால் ஏற்ப ட்ட குறைவு அல்ல என்றும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் நிதி ஒதுக்கீடு குறைந்ததால் மீட்புப் பணிகள் மற் றும் தரவு சேகரிப்புப் பணிகள் முடங்கி யதே இதற்கு காரணம் என் றும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் கொட்டப்படும் குப்பைகள்; அவதானிக்க கண்காணிப்பு கமராக்கள்

## வவுனியா பிரதேச சபை அதிரடி



(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் வீதியில் குப்பை கொட்டுவதை அவதானித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வீதிகளில் பல இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படுவதாக பிரதேச சபையின் தலைவர் பாலேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுச்சூழல் மாசு மற்றும் வீதியோர கழிவு அகற்றுவதில் ஏற்படுகின்ற பல் வேறு நெருக்கடிகளை கருத்தில் கொண்டு எமது பிரதேச சபைக்குட்பட்ட 57 இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் நேற்று முன்தினம் பூட்டப்பட்டன.

வீதியோரங்களில் குப்பை கொட்டுவோரை கண்டறிந்து அவர்களுக்கு தண்டனை வழங்கும் நோக்கோடு குறித்த கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டதோடு பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகளும் இதன் ஊடாக கண்காணிக்கப்படும் எனவும் பிரதேச சபையின் தலைவர் பாலேந்திரன் தெரிவித்தார். (3-250)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
7இல்செவ்
கி-பா:70
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc,Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/16592

பிறப்பு:1981-இந்து
நட்சத்திரம்: மூலம்
7இல்செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-BSc,Engineer(UK)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16593

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி.பா: 32
உயரம்:5'8"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/16597

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:சுவாதி
2இல் செவ். கி.பா:32
உயரம்:5'4"
தகைமை/தொழில்: BTech, MSc,Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16599

பிறப்பு: 1979-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி.பா: 13 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L.கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்
தொ.இ: B/15608

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா:26 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்
தொ.இ: G/16452

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:47
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Beautician
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16487

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc,MSc,QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16450

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
உயரம்:5'4"
தகைமை/தொழில்: Diploma,Canada
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்
தொ.இ: G/16481

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 66
7இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Engineer
எதிர்பார்ப்பு: Engineer,Doctor
தொ.இ: G/14626

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 548

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## கை கட்டும் பழக்கம்!

நாம் ஒருத்தர் முன்னாடி நின்று பேசிக்கொண்டிருக்கிறோம் என்று வைங்க ! கொஞ்ச நேரம் அவர் இயல்பாக நின்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.. பிறகு மெதுவா கைகளை கட்டிக்கொண்டு கேக்க ஆரம்பிக்கிறார் என்றால் அவர் நம்ம பேச்சை மரியாதையாக கேட்கிறார் என்று நினைக்கக் கூடாது.

மரியாதையாக நாம் பேசுவதை நிறுத்திக்கச் சொல்கிறார் என்று அர்த்தம்.

அந்த உடல் மொழியைப் புரிந்துகொள்ளாமல் நாம் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் அவருக்கு நம்ம பேர்ல ஒரு வெறுப்பு வந்து விடும்.

நம்ம முன்னாடி இருக்கிறவர் கைகட்டை அவிழ்க்கிறதுக்கு சில தந்திரங்கள் இருக்கு... பேச்சுக்கு மத்தியிலேயே அவரிடம் ஒரு பேனாவை கொடுங்க... அல்லது புத்தகத்தைக் கொடுங்க. அவர் கை பிரியும். மறுபடியும் உங்க பேச்சை அவர் கவனமாக கேட்பார். மறுப்புச் சிந்தனை நீங்கும். ஏற்புச் சிந்தனை வந்து விடும்.

ஒருத்தர் பலமாக கையைக் கட்டிக்கொண்டிருக்கிறார் என்றால் அவர் மனதிலே என்ன நினைப்பு மறைந்திருக்கும் தெரியுமா?

நான் தனி... சேர விரும்பவில்லை.. எனக்கு இந்த சூழ்நிலை இயல்பாக இல்லை. பிடிக்கவில்லை.

இதுமாதிரி மறுப்பு எண்ணத்தின் ஒட்டு மொத்தத் தொகுப்புத்தான் கை கட்டுவது.

மனோ தத்துவ நிபுணர்கள் அப்படித்தான் சொல்றாங்க். இரண்டு கையைக் கட்டிக்கொள்ளும் போது.. எதிலேயோ இருந்து தப்பிக் கொள்வதற்கு ஒரு பாதுகாப்பு கிடைத்தது மாதிரி ஒரு உணர்வு கிடைக்கிறது.

நம்ம கைகள் நம்ம உடம்புக்கு முன்னாடி இருக்கிறதினாலே ஒரு தற்காப்பு அல்லது கவசம் மாதிரி. அது நமக்குத் தெரிகிறது.

இந்தப் பழக்கம் நமக்கு எப்படி ஆரம்பிக்கிறது தெரியுமா?

சின்ன வயதிலே ஏதாவது தப்பு செய்துவிட்டு அம்மாவுக்குப் பின்னாடிப் போய் ஒளிஞ்சிக்கிறது, ஒரு கதவுக்குப் பின்னாடிப் போய் ஒளிஞ்சிக்கிறது, இந்தப் பழக்கம் பின்னாடி நாம் வளர்ந்த பிறகு.. நம்மளை மறைக்கிறதுக்கு முன்னாடி எதுவும் இல்லை. அதனாலே கையை முன்னாடி கொண்டு வந்து கட்டிக்கிறோம். கையையே ஒரு மறைப்பா உபயோகப்படுத்துகிறோம். அவ்வளவுதான் அதனாலே இப்பவும் ஒரு கும்பலிலே நாம் கையைக் கட்டிக்கிட்டிருந்தோம்ன்னா, நாம் ஒரு பெரிய பாதுகாப்புக்குள்ளே இருக்கிறதாக நம்ம உள் மனசு நினைத்துக் கொள்கிறது!

அச்சுறுத்துற சந்தர்ப்பங்கள்.. பதட்டம் ..பலர் முன்னாடி நிற்க வேண்டிய சூழ்நிலை... மேடை இதுமாதிரி இடங்களிலே நம்ம கைகளை மார்பிலே கட்டிக்கொண்டால் மனதுக்கு ஒரு நிம்மதி..! பிடிக்காத இடம்.. பிடிக்காதவர் மத்தியிலே நிற்க வேண்டிய சந்தர்ப்பம்... பிடிக்காத சூழ்நிலை இதுமாதிரி நேரங்களிலே முன்கை கட்டுறது ஒரு வழக்கமான அறிகுறி. நான் அப்படி இல்லையென்று நமக்கு இப்போது தோணலாம்... இருந்தாலும் நம்ம உள் மனது அப்படித்தான் நினைக்குதாம்!

ஒரு மேலதிகாரி அல்லது தன்னை மேலானவராக நினைச்சிக்கிற ஒருத்தர்... ஒரு பணியாளரைப் பார்க்கிறப்போ முன்கையைக் கட்ட மாட்டார். பின்னாடி கோர்த்துக்கிட்டு நிமிர்ந்து நிற்பார். அவருடைய மார்புக்கு அப்போ பாதுகாப்பு தேவைப்படவில்லை. பாக்கெட்லே கூட கைகளை போட்டுக்கொள்வார்.. ரொம்ப தைரியமா இருக்கறதாக அவர் காட்டிக்கிறார்.

ஒரு காவல்துறை அதிகாரி.. இடுப்பிலே துப்பாக்கி வைத்திருக்கிறார்... அவர் கை கட்ட மாட்டார். ஏனென்றால் துப்பாக்கி இருக்குங்கற நினைப்பு மனதிலே தைரியத்தைக் கொடுத்துடுது!

ஒரு நிபுணர்.. ஒரு கூட்டத்துலே பேசுகிறார். வேணும் என்றே அவங்க உணர்ச்சியைப் பாதிக்கறது மாதிரி பேசுகிறார்.. ரொம்ப சீரியஸா அவர் பேசப் பேச 90 சதவீதம் பேர் கையைக் கட்டிக்கொண்டுருந்தாங்களாம். சும்மா அப்படி விளையாட்டுக்குச் சொன்னேன் என்று இவர் சொன்னதும் எல்லாரும் சிரிச்சுக்கிட்டே கையை எடுத்துட்டாங்களாம்.

நம்ம மனசு என்ன நினைக்குது என்பதை, நமக்குத் தெரியாமலே நம்ம உடம்பு வெளிப்படுத்தி விடுது அதனாலேதான் இதை "மெய்ப்பொருள்" என்று சொல்கிறார்கள்.

ஒரு வகுப்பிலே கை கட்டாமே பாடம் கேக்கறவங்களை விட கை கட்டிக்கொண்டுப் பாடம் கேக்கறவங்க 38 சதவீதம் குறைவாகத்தான் பாடத்தை கவனிச்சிருக்காங்க, அப்படிங்கறது ஒரு சோதனை மூலமா தெரிய வந்திருக்கு. மேடையிலே பேசும்போது கூட எதிரிலே உள்ளவங்க நிலைமையை கவனிச்சுப் பார்க்கணும். நிறைய பேர் கைகட்ட ஆரம்பிச்சாங்கன்னா. உங்க கருத்தை அவங்க மனசு ஏத்துக்கலேன்னு அர்த்தம்.

ஒரு பேச்சாளர் சொன்னார்.

"நான் ஆயிரம் பேர் கூடியிருந்த ஒரு கூட்டத்திலே பேசிக்கொண்டிருந்தேன். முதல் வரிசையிலே உட்கார்ந்திருந்த ஒரே ஒரு ஆள் மட்டும்தான் கை கட்டிக்கொண்டுருந்தான். அதைப் பார்த்தவுடனே பேச்சை முடிச்சுக்கொண்டு கீழே இறங்கிட்டேன்!" அப்படின்னார்.

"ஒரு ஆளுக்காக பேச்சை நிறுத்தணுமா?" என்று கேட்டேன்.

"அந்த நபர் கையை கட்டிக்கிட்டிருந்ததுனாலே மட்டும் நான் பேச்சை நிறுத்தவில்லை. அப்படி கட்டி இருந்த கையிலே ஒரு அழுகின முட்டையை வேற வச்சிருந்தான். அதைப் பார்த்ததும் தான் நான் சடார்ன்னு பேச்சை முடிச்சிக்கிட்டு கீழே இறங்கிவிட்டேன்!" அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத உப்பளம் அமைக்கும் முயற்சி தடுத்து நிறுத்தம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளி பகுதியில் பெரும்பான்மையினத்தவர்களால் சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கும் முயற்சியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளி பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக்காணிகளில், உப்பளம் அமைப்பதற்கு கடந்த 2025 ஆம் ஆண்டு இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமொன்றில் பெரும்பான்மை இனத்தைச்சார்ந்த சிலரால் அனுமதி கோரப்பட்டிருந்தது.

தமிழ் மக்களுக்குரிய பூர்வீக விவசாயக்காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாதென இதன்போது வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து, குறித்த பகுதியில் உப்பளம் அமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாதென குறித்த முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உப்பளம் அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பிற்பாடும், பெரும்பான்மை இனத்தவர்கள் சிலரால் குறித்த குஞ்சுக்கால்வெளி பகுதியில் உப்பளம் அமைப்பதற்கான சில முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பினரால் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குஞ்சுக்கால் வெளிபகுதியில் சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கும் முயற்சியில் பெரும்பான்மை இனத்தவர்கள் ஈடுபட்டிருந்தபோது வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் கொக்கிளாய் பொலிஸார் குறித்த சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இருப்பினும் அத்தோடு தமது சட்டவிரோத செயற்பாட்டை நிறுத்தாத பெரும்பான்மையினத்தவர்கள் தொடர்ந்தும் நேற்று குஞ்சுக்கால்வெளி பகுதியில் உப்பளம் அமைப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பினரால் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் பகுதியைச்சேர்ந்த மக்களுடன் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் நிலைமைகளைப் பார்வையிட்டார். அப்போது அங்கு பெரும்பான்மை இனத்தவர்கள் சிலர் குழிகள் அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இத்தகைய சூழலில் இவ்வாறு அங்கு சட்டவிரோதமாக குழிகள் அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு கொக்கிளாய் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் வருகைதந்து நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர். இதன்போது குறித்த சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கோரியதற்கு அமைவாக அங்கு இடம்பெற்ற சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. (3)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவ நிகழ்வானது எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து தினமும் 9 மணி மற்றும் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் நடைபெற்று எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதென தேவஸ்தான முகாமையாளரும் உரிமையாளருமான க.வைத்தீஸ்வரச் செட்டியார் தெரிவித்துள்ளார். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மட்டுவில் ரூபா | வவுனியா ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 300 | 280 | 180 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 180 | -- | 310 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 250 | 320 | 300 | 300 |
| தக்காளி | 100 | 130 | 120 | 150 | 140 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 250 | 200 | 200 | 90 |
| கோவா | 100 | 100 | 180 | 150 | 200 | 150 |
| கரட் | 250 | 350 | 400 | 400 | 350 | 270 |
| பூசணி | 100 | 120 | 100 | 150 | 120 | 80 |
| புடோல் | 150 | 150 | 150 | 200 | 160 | 130 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 200 | 150 | 140 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 300 | 300 | 150 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 160 | 150 | -- |
| பாகற்காய் | 400 | 450 | 450 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 300 | 300 | 250 | 180 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 500 | 350 | 180 |
| லீக்ஸ் | 350 | 300 | 380 | 300 | 300 | 260 |
| பீற்றூட் | 100 | 100 | 180 | 150 | 200 | 90 |
| கறிமிளகாய் | 350 | 400 | 500 | 400 | 400 | 300 |
| முருங்கைக்காய் | -- | 4000 | 3000 | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 250 | 350 | 350 | 300 | 275 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 140 | 60-140 | 150 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 150 | 200 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 100 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 350 | 350 | 400 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 120 | 70 | 150 | 150 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 150 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 180 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | -- | 70 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | 150 | -- | 100 |

# இராசிபலன்

28.02.2026
மாசி 16, சனிக்கிழமை
துவாதசி முன்னிரவு 9.06 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 9.56 மணிவரை
சுப நேரம் 3.28-4.58 மணிவரை
இராகுகாலம் 9.28-10.58 மணிவரை

சந்திராஷ்டமம்: மூலம்

வளவன்




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




விருப்பங்கள் நிறைவேற இஷ்டதெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, ஆழ்ந்த சிந்தனையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், நினைத்த காரியம் கைகூடும் வாய்ப்புண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும்.




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.




ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




மறைமுகப் போட்டிகள் மாறும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தன்னம்பிக்கை கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், செல்வ நிலை உயரும் நாள்.




காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

தேவைகளைக் குறைத்துக் கொண்டவன் தெய்வத்தில் அருகில் உள்ளவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 989





வஞ்சித்தவர்களையும் அவமதித்தவர்களையும் பழி வாங்குவதைத் தவிர அவளுடைய உள்ளத்தில் வேறு எதற்கும் இடம் இருக்கவில்லை. அதற்கு வேண்டிய சூழ்ச்சித் திறன்கள் அன்னையின் கர்ப்பத்தில் இருந்த நாளிலேயே அவளுடைய இரத்தத்தில் சேர்ந்திருந்தன.

வாழ்க்கையில் அவள் பட்ட அல்லல்களும் ஏமாற்றங்களும் பயங்கர அனுபவங்களும் அவளுடைய உள்ளத்திலிருந்து இரக்கம், அன்பு முதலிய மிருதுவான பண்புகளை அடியோடு துடைத்து இரும்பினும் கல்லினும் கடினமாக்கியிருந்தன.

துவேஷத்துக்கு மாற்று அளிக்கக் கூடிய அன்பு என்னும் அமுதம் அவளுக்கு கிட்டவில்லை. அவள் யார் யாரிடம் அன்பு வைத்தாளோ அவர்கள் ஒன்று, அவளை அலட்சியம் செய்து புறக்கணித்தார்கள் அல்லது துரதிர்ஷ்டத்துக்கு உள்ளாகி மாண்டு போனார்கள்.

அவளை அவமதித்தவர்களும் அவளால் வெறுக்கப்பட்டவர்களும் மேன்மையுடன் வாழ்ந்தார்கள். ஒரு பெண்ணின் உள்ளத்தை நஞ்சினும் கொடியதாக்குவதற்கு வேறு என்ன காரணங்கள் வேண்டும்? தன்னை

இக்கதையில் இனி வரப்போகும் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்தக் குணாதிசய விளக்கத்தை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று கருதி எழுதினோம்.

உணவருந்தும் வேளையிலும் அவர்களுக்குள் உற்சாகமான பேச்சு எதுவும் நடைபெறவில்லை. நந்தினியும், கரிகாலரும் வந்தியத்தேவனும் அவரவர்களுடைய கவலையிலே ஆழ்ந்திருந்தார்கள். இதனால் மணிமேகலைக்குத்தான் மிக்க ஆதங்கமாயிருந்தது.

பழுவூர் ராணியுடன் உல்லாசமாகப் பேசி உற்சாகமாகப் பொழுது போக்கும் எண்ணத்துடன் அவள், அன்று நீர் விளையாடலுக்கும் வனபோஜனத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தாள். இளவரசரும் வந்தியத்தேவனும் எதிர்பாராமல் வந்து சேர்ந்து கொண்டவுடன் அவளுடைய உற்சாகம் அதிகமாயிற்று.

ஆனால் அதற்குப் பிறகு மற்ற மூவரும் பேசிய வார்த்தைகளும் நடந்து கொண்ட விதமும் அவளுக்குச் சிறிதும் திருப்தி அளிக்கவில்லை. நந்தினியையும் வந்தியத் தேவனையும் சேர்த்துப் பார்த்த போது ஏற்பட்ட வேதனைய்யை அவளுடைய குழந்தை உள்ளம் உடனே மறந்து விட்டது.

அதைப் பற்றித் தவறாக எண்ணி அசூயைக்கு இடங் கொடுத்தது தன்னுடைய தவறு என்று எண்ணித் தேறினாள். அதற்கு பிறகு மற்ற மூன்று பேரும் கலகலப்பில்லாமல் சிடுசிடுவென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்ததும் கபடமாகப் பேசி வந்ததும் அவளுக்கு விளங்கவும் இல்லை பிடிக்கவும் இல்லை.

எனவே, உணவருந்திச் சிறிது நேரம் ஆனதும் மணிமேகலை "அக்கா! நாம் திரும்பிப் பிரயாணப் படலாமா? படகைக் கொண்டு வரச் சொல்லட்டுமா? இவர்கள் இருவரும் நம்முடன் வருகிறார்களா அல்லது குதிரை மீது வந்த வழியே போகிறார்களா?" என்று கேட்டாள்.


அப்போதுதான் கரிகாலர் சிந்தனை உலகத்திலிருந்து வெளி உலகத்துக்கு வந்தார். "ஆ! ஆ! இந்தப் பெண்ணின் யாழிசையைக் கேட்காமல் திரும்புவதா? ஒரு நாளும் முடியாது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அவிழ்ப்பது சுலபம்; அள்ளுவது அரிது



துறவி ஒருவரின் மதிப்பைக் குறைக்கும் வண்ணம் அவரைப் பற்றித்தாறுமாறான பொய்ச் செய்திகளை அவதூறாகப் பரப்பிக் கொண்டிருந்தான் ஒருவன். இப்படியே சிறிது காலம் சென்றது.

நாளாக ஆக அவன் மனசாட்சியே அவனைத் துன்புறுத்தியது. எப்படியேனும் துறவியிடம் உண்மையைச் சொல்லி மன்னிப்புப் பெற வேண்டும் என்று நினைத்தான் அவன்.

துறவியிடம் வந்தான் அவன். தான் செய்ததை எல்லாம் அவரிடம் கூறினான். என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னான்.

துறவி அவனைப் பார்த்து, "ஊரில் எல்லோரும் கூடும் பொது இடத்திற்கு உன் வீட்டிலிருந்து தலையணை ஒன்றை எடுத்துச் செல். அதைக் கிழித்து அதனுள் இருக்கும் பஞ்சை எல்லாம் அங்கேயே பறக்க விட்டு விட்டு இங்கே திரும்பு" என்றார்.

"தான் செய்த பாவத்திற்கு இவ்வளவு எளிமையான பரிகாரமா" என்று நினைத்த அவன் துறவி சொன்னவாறே செய்து விட்டு அவரிடம் திரும்பினான்.

துறவியைப் பார்த்து, "ஐயா! நீங்கள் சொன்னவாறே செய்து விட்டேன். இன்னும் ஏதேனும் செய்ய வேண்டுமா?" என்று பணிவாகக் கேட்டான்.

அதற்குத் துறவி, "நீ பஞ்சினைப் பறக்க விட்ட இடத்திற்கு மீண்டும் செல். காலித் தலையணை உறையில் அவற்றைப் பழையபடி அடைத்துக் கொண்டு வா" என்றார்.

"ஐயா! யாராலும் செய்ய முடியாத செயல் அல்லவா இது. அந்தப் பஞ்சுத் துகள் யாவும் இந்நேரம் எல்லா இடங்களுக்கும் பறந்து சென்றிருக்குமே? என்னால் எப்படி மீண்டும் அவற்றை ஒன்று சேர்க்க முடியும்?" என்று கேட்டான் அவன்.

"தலையணையில் இருந்து பஞ்சுத் துகள்களைப் பறக்க விடுவது எளிது. மீண்டும் ஒன்று சேர்ப்பது கடினம். அதேபோல ஒருவரைப் பற்றிப் பொய்யாக அவதூறு பரப்பி விடுவது எளிது. அந்த அவதூற்றினைத் துடைப்பது மிகக் கடினம். இதை இப்பொழுது நன்கு புரிந்து கொண்டிருப்பாய். இனியாவது பிறரைப் பற்றி அவதூறு பேசாதே" என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார் துறவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வர்த்தகம் மட்டும் எங்கள் வடக்கின் தொழிலாயிற்றா?

யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாணம் முழுமையிலும் கட்டுமானப் பணிகள் தடல்புடலாக நடந்தாகின்றன.

வீடமைப்பு என்பதைக் கடந்து, வர்த்தக நிலையங்களுக்காக நடந்தாகின்ற கட்டுமானங்கள் சொல்லிமாளா.

அந்தளவுக்கு வீதியின் இருமருங்கும் வர்த்தக நிலையங்களாகிவிட்டன.

அதிலும் விவசாய நிலங்கள் இப்போது வீடமைப்புக்கும் வர்த்தக நிலையங்களுக்குமாக தாரைவார்க்கப்பட்டு விட்டன.

ஆம், இப்போது வட மாகாணம் விவசாயத்தில் அதிலும் குறிப்பாக மரக்கறிச் செய்கையில் கடும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

ஒரு காலத்தில் எங்கள் விவசாய ஊர்களில் இருந்து வருகின்ற மரக்கறிகள், ஊர்ப் பெயர்களால் அழைக்கப்பட்டு நுகர்வோரை ஈர்த்தன.

ஆனால் இப்போது தம்புள்ளையில் இருந்து எங்கள் சந்தைகளுக்கு மரக்கறி வந்து சேராவிட்டால், எங்கள் பாடு அம்போ என்றாகிவிடும்.

அந்தளவுக்கு மரக்கறிச் செய்கை எங்கள் வட மாகாணத்தில் கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இவ்வாறு மரக்கறிச் செய்கை வீழ்ச்சியடைவதற்கு நம் பிரதேசங்களில் காணிகளின் விலைகள் கண்டபாட்டில் உயர்வடைந்தமையும் காரணமாகும்.

ஆம், பிரதான வீதிகளை முகப்பாகக் கொண்ட விவசாய நிலங்கள் – தோட்டங்கள் அதிக விலைக்கு வாங்கப்பட்டு அங்கு வீடுகள் கட்டப்படுகின்றன. அதேபோல வர்த்தக நிலையங்களின் கட்டுமானங்களுக்கும் குறைவில்லை.

இந்நிலையில் தோட்டக்காணிகளை வீடு கட்டுவதற்காக விற்று; அந்தப் பணத்தை வங்கியில் நிலையான வைப்பிலிட்டால் வருமானம் வருகிறது.

தோட்டத்தில் நின்று வெயிலில் காய்ந்து உடல் களைத்து வேலை செய்ய வேண்டிய தேவையில்லை என்ற மனநிலைக்கு நம் சிரேஷ்ட விவசாயிகள் வந்துவிட்டனர்.

சிரேஷ்ட விவசாயிகளின் மனநிலை இதுவென்றால், கனிஷ்ட விவசாயிகளின் (இளைஞர்கள்) நிலை எப்படியாக இருக்கும் என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

ஆம், பலாலியில் முகாமிட்டுள்ள இராணுவம் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுகிறது.

இராணுவம் உற்பத்தி செய்கின்ற பச்சை மிளகாய், பீற்றூட், கெக்கரிக்காய், கோவா என்பன எங்கள் சந்தைகளில் கணிசமாக விற்பனையாகின்றன.

என்ன செய்வது ஒரு காலத்தில் திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய், ஊரெழு எனப் பலாலி ஈறான விவசாயிகளிடம் இராணுவம் தனக்குத் தேவையான மரக்கறிகளை கொள்வனவு செய்திருந்தது.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறி, இராணுவத்திடமிருந்து நாம் மரக்கறிகளை வாங்க வேண்டியதாக நிலைமை வந்துற்றது.

ஆக, இதுபற்றி யாரேனும் சிந்திக்காவிட்டால் எங்கள் வடக்கு மண்ணின் எதிர்காலம் மிகப் பாதகமாகிவிடும் கவனம்.

# நாடு முழுவதும் தொடர்ச்சியாக தொழிற்சங்க நடவடிக்கை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வைத்தியர்கள் மற்றும் பொது சுகாதார அமைப்பைப் பாதிக்கும் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட எழுத்து பூர்வ ஒப்பந்தங்களை அரசாங்கம் மதிக்கத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டி, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு முழுவதும் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

நாட்டின் இலவச சுகாதார சேவையை வலுப்படுத்துவதும் மருத்துவமனைகளில் உள்ள முறையான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதும் எந்தவொரு நிர்வாகத்திற்கும் முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்றாலும், தற்போதைய அரசாங்கம் அந்தப் பொறுப்பைத் தவிர்ப்பதாகத் தெரிகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு போதுமான நேரம் வழங்கிய போதிலும் அவர்களின் கவலைகளைத் தீர்க்க அர்த்தமுள்ள அல்லது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று சங்கம் குறிப்பிட்டது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ள முக்கிய கோரிக்கைகளில் பின்வருவன அடங்கும்.

அனைத்து வகை மருத்துவர்களையும் உள்ளடக்கிய "இலங்கை மருத்துவ சேவை" என்ற தலைப்பில் ஒரு சிறப்பு சேவைப் பிரிவை நிறுவுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுதல்.

இடையூறு கிடைக்கும் தன்மை மற்றும் போக்குவரத்து (DAT) கொடுப்பனவைப் புதுப்பித்தல்.

சுற்றறிக்கை 22/99 இன் படி போக்குவரத்து சிக்கல்களை நிவர்த்தி செய்தல்.

கூடுதல் கடமைப் படியை நிலையான படியாக மாற்றுதல்.

ஆராய்ச்சி கொடுப்பனவுகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பது.

முதுகலை படிப்புகளில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்தல்.

சுகாதார அமைப்பிற்குள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் பணிப் பிரிவைப் புதுப்பித்தல்.

மேற்கண்ட விஷயங்களைத் தீர்க்க நிதி அமைச்சகத்துடன் காலக்கெடுவுடன் கூடிய விவாதங்களைத் தொடங்குதல்.

இதன்படி நாடு தழுவிய ஏழு தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

(ம-7)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் வைபமானது இன்று (28) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆஸ்பத்திரி வீதி தாராக்குளத்தில் இடம்பெறவுள்ளது.

வெளிச்சம் வாழ்வியல் அமைப்பின் தலைவர் பீற்றர் போல் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும் அமைப்பின் போசகருமான வரதீஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

### பருத்தித்துறை பிரதேச செயலகத்தில்

## பிரஜா சக்தி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட தேசிய வேலைத்திட்டமான "பிரஜா சக்தி" அபிவிருத்தி முன்மொழிவிற்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச அபிவிருத்தி குழு தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் "பிரஜா சக்தி" திட்டத் தலைவர்கள், நகர சபை உபதவிசாளர், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது, "பிரஜா சக்தி" திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதற்கட்ட முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து செயற்திட்டம் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, திட்டத்தை விரைவாகவும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் வகுக்கப்பட்டன.

வறுமை நீக்கத்தை இலக்காகக் கொண்டு மக்கள் மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையில் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த அனைவரும் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. (ம-7)

## கோட்டாவைக் கைது செய்ய அரசாங்கம் முயற்சி

### விமல் வீரவன்ச

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அடுத்து கைது செய்ய முயற்சிகள் நடைபெற்று வருவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

முன்னாள் புலனாய்வுத் தலைவர் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்படவுள்ளதாக வீரவன்ச கூறினார்.

அவர்களின் அடுத்த இலக்கு சுரேஷ் சலேயின் கைது மூலம் கோட்டாபய ராஜபக்ஷ. இது வெறும் முட்டாள்தனம். ஈஸ்டர் தாக்குதல்களுக்கு மூளையாக செயற்பட்ட சஹ்ரான் ஹாஷிம் போன்ற ஒருவர் தீவிர சிங்கள பௌத்த மதத் தலைவர் என்று அழைக்கப்படும் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க தனது உயிரைத் தியாகம் செய்வார்களா? இது என்ன முட்டாள் தனம்?" என்று வீரவன்ச கேள்வியெழுப்பினார்.

(ம-7)

## மட்டக்களப்பில் யானை தாக்கியதில் பெண் பலி

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை முனைக்காடு குடியிருப்பு பிரதேசத்திற்குள் காட்டு யானை ஒன்று ஊடுருவி தாக்கியதில் 74 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முனைக்காடு மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 74 வயதுடைய கதிர்காமத்தம்பி சிவபாக்கியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யானையின் அட்டகாசத்தால் வீடு ஒன்றும் சேதமடைந்துள்ளது. இந்த மாதம் மாத்திரம் காட்டு யானைகளின் தாக்குதலால் மூவர் உயிரிழந்துள்ளதுடன், 6 பேர் படுகாயமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

34

என். சொக்கன்

ஒஸாமா எதிர்பார்த்ததும் அதை தான். இதுவரை அல் காய்தா நிகழ்த்திய துண்டு துக்கடாத் தாக்குதல்களெல்லாம் வெறும் டிரைலர் மட்டுமே.

இதுதான் அவர் ஆசையோடு கஷ்டப்பட்டு உருவாக்கிய மெயின் பிக்சர். ஒரே காட்சியில் சூப்பர் ஹிட்.

சோகத்தைக் காட்டிலும், அமெரிக்காவுக்கு அதிர்ச்சிதான் அதிகம். "நாம் பத்திரமாக இருக்கிறோம்" என்கிற அவர்களுடைய நிம்மதி உணர்வு காயப்பட்டிருந்தது. அடுத்து என்ன நடக்குமோ என்கிற பயம் பரவத் தொடங்கியிருந்தது.

மறுநாள், அந்த அதிர்ச்சியும் பாதுகாப்பற்ற உணர்வும், கோபமாக மாறியது. "வெளியிலிருந்து யாரோ சில இளைஞர்கள் வந்து இப்படி ஒரு மிகப் பெரிய தாக்குதலை வெற்றிகரமாக நிகழ்த்தியிருக்கிறார்கள். அதுவரை உளவுத்துறை என்ன செய்துகொண்டிருந்தது?" என்று பாய்ந்தார்கள்.

உள்ளூரில் நிகழ்ந்த தாக்குதல் என்பதால், முதலில் மாட்டிக் கொண்டது FBIயின் குடுமிதான். தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை அமெரிக்காவினுள் அனுமதித்தது முதல், இத்தனை நாட்களாக அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கைது செய்யாமல் கோட்டை விட்டதுவரை அத்தனைக்கும் அவர்கள் மீது கல்லெறியப்பட்டது.

அடுத்து, விமர்சனக் கணைகள் சிஐஏ மீது திரும்பின. என்னதான் உள்நாட்டில் நிறைவேற்றப்பட்ட தாக்குதல் என்றாலும், அதற்கான திட்டங்கள் வெளிநாட்டில் தயாரானவை தானே? ஒஸாமா பின் லேடன் இப்படி ஒரு விடயம் செய்யப் போகிறார் என்று முன்கூட்டியே தெரிந்துகொள்ளாமல் எங்கே போய் பல் குத்திக் கொண்டிருந்தீர்கள்?

இத்தனைக்கும், சிஐஏ இப்படி ஒரு தாக்குதல் நிகழக்கூடும் என்று அமெரிக்க அரசைப் பலமுறை எச்சரித்திருந்தது. அதை அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்காவிட்டால், உளவுத்துறை என்ன செய்யமுடியும்?

தவிர, சோவியத் யூனியன் சரிவுக்குப் பிறகு, படிப்படியாக சிஐஏவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுவிட்டன. பல விடயங்களை அவர்கள் நினைத்தாலும் செய்ய முடியாது என்கிற அளவுக்கு சிஐஏவின் கைகள் கட்டிப்போடப்பட்டு விட்டதால், அவர்கள் வெறும் தகவல் சேகரிப்பு இயக்கமாக மட்டும் செயற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இப்படி ஆயிரம் காரணங்கள் சொன்னாலும், 9/11 தாக்குதலைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்ளாதது அமெரிக்க உளவுத்துறையின் மிகப் பெரிய தோல்விதான். அவர்களுடைய இந்தச் சொதப்பலுக்குப் பிறகுதான், மற்ற பாதுகாப்பு நிறுவனங்களின் தவறுகள் வருகின்றன.



இதனால், 9/11 தாக்குதலைத் தொடர்ந்து, அமெரிக்கா தீவிரவாதத்துக்கு எதிரான போரை அறிவித்தது. இதில் அவர்களுக்குப் பின்பலமாக சிஐஏ செயற்படவேண்டியிருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் (பழைய சிஐஏ இயக்குனர் இல்லை. அவருடைய மகன். இப்போதைய ஜனாதிபதி) சிஐஏவின் பட்ஜெட்டை அதிகப்படுத்தினார். கூடுதல் அதிகாரங்களைக் கொடுத்தார்.

9/11 தாக்குதலால், அமெரிக்காவுக்கு எத்தனையோ இழப்புகள் இருக்கலாம். ஆனால் சிஐஏவைப் பொறுத்தவரை, கெட்டதிலும் ஒரு நல்லது. மீண்டும் அமெரிக்கச் சமூகத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டது.

சிஐஏவுக்கு இனி வானளாவிய அதிகாரங்களைக் கொடுத்தாலும், பல பில்லியன் டொலர்களைச் செலவழித்தாலும் கூட, யாரும் கேள்வி கேட்கப்போவதில்லை. வேறெதையும் விட, நாட்டின், நாட்டு மக்களின் பாதுகாப்பு அதிமுக்கியம், வெளி விவகாரங்களைக் கவனித்து எச்சரிப்பதற்கு ஒரு சக்தி வாய்ந்த உளவுத்துறை அவசியம் என்பதை அமெரிக்கர்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்.

அதேசமயம், இது கொள்கையளவில் ஏற்பட்ட புரிதல் அல்ல. பயத்தால் வந்த பின்விளைவு மட்டுமே!

### 13. உளவுப் பெண்கள்

அந்த அறைமுழுவதும், ஆர்வமுள்ள இளைஞர்கள் நிறைந்திருந்தார்கள். எல்லோரும், சிஐஏவில் பணிபுரிவதற்காக விண்ணப்பித்திருந்தவர்கள். நேர்முகத் தேர்வு, பயிற்சி, அதன்பிறகு உளவுப் பணி என்று ஒவ்வொருவரும் தீவிரக் கனவுகளில் மூழ்கியிருந்தார்கள்.

அன்று காலைமுதல், வரிசையாகப் பல அதிகாரிகள் வந்து, சிஐஏவின் பல்வேறு பிரிவுகளைப் பற்றியும், அவற்றின் செயற்பாடுகளைப்பற்றியும் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, திடீரென்று ஒரு சின்ன ஆச்சரியம்.

அடுத்து பேசுவதற்காக வந்த சிஐஏ அதிகாரி, ஒரு பெண். நிறைமாத கர்ப்பிணி வேறு. கைக்குட்டையால் நெற்றி வியர்வையை லேசாக ஒற்றிக்கொண்டு, தன்னுடைய துறையைப் பற்றிச் சுவாரஸ்யமாக விவரிக்கத் தொடங்கினார் அவர்.

உளவுத்துறையில் ஒரு பெண் அதிகாரியா? அந்த இளைஞர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஆரம்பத்தில் அவரை விநோத மாகப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள். அவர் பேசப் பேச, மரியாதையோடு கவனிக்க ஆரம்பித்தார்கள்.

சிஐஏவில் மட்டுமில்லை,உலகம் முழுவதுமே, உளவுத்துறை என்றால், அது ஆண்களின் வேலை என்பதுதான் பொதுவான நம்பிக்கையாக இருக்கிறது. திரைப்படங்களில் வருவதுபோல, ஜம்மென்று ஓவர்கோட், தலைக்குத் தொப்பி அணிந்துகொண்டு, எலக்ட்ரானிக் சாதனங்கள், கைத்துப்பாக்கிகளோடு கிளம்பிப்போகும் உளவாளிகளின் பிம்பத்தில், பெண்களுக்கு இடமே இருப்பதில்லை.

உண்மையில், சிஐஏ தொடங்குவதற்கு முன்பிருந்தே, அமெரிக்க உளவுத்துறையில் பெண்களின் பங்களிப்பு இருந்து வந்தது. சிஐஏவின் நிறுவனராக மதிக்கப்படும் டொனொவன், அந்தக் காலத்திலேயே பரந்த மனப்பான்மையோடு சிந்தித்த அதிகாரிகளில் ஒருவர்.

பெண்கள் மட்டுமில்லை, வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த அகதிகள், போர் காரணமாக அநாதைகளாக்கப் பட்டவர்கள் என அன்றைய அமெரிக்க சமூகத்தில் யாரெல்லாம் சிறுபான்மையினராக ஒதுக்கப் பட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் டொனொவனின் OSS அமைப்பு ஆதரவு அளித்தது.

இதற்குக் காரணம், வெறும் பரிதாப உணர்ச்சி அல்ல. உளவுப் பணி என்பது எல்லோருக்கும் பொதுவானது என நம்பினார் டொனொவன். ஆகவே, யாரை வேண்டுமானாலும் சிறந்த உளவாளிகளாக, ஒற்றர்களாகத் தயார் செய்யமுடியும் என்பது அவருடைய உறுதியான நம்பிக்கை.

இதனால், இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் தொடங்கி, அமெரிக்கா தனது உளவுப் பணிகளுக்குப் பெண்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. அதுவும், சும்மா ஆஃபீஸில் உட்கார்ந்து ஃபைல் புரட்டுகிற வேலைகளுக்கு அல்ல, நிஜமான களப்பணிகளுக்கு.

உளவுத்துறையைப் பொறுத்தவரை, களப்பணி என்றால் அதில் இரண்டு வகையான ஊழியர்கள் பயன்படுத்தப்படுவார்கள் - அதிகாரிகள், உளவாளிகள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடுகளை...

காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் நீண்ட காலமாக மாடுகள் திருடப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் சிறிய ரக வாகனம் ஒன்றில் ஒன்பது மாடுகளைக் கடத்தி சென்ற வேளை மாடுகளைக் கடத்தியவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் கடத்தப்பட்ட மாடுகளுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இன்றைய தினம் அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கச்சதீவு...

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று மாலை ஆரம்பமானது.

இந்தியாவிலிருந்து சுமார் 4 ஆயிரம் பக்தர்களும் இலங்கையிலிருந்து 4500 பக்தர்களும் திருவிழாவில் பங்கேற்றனர்.

இன்று சனிக்கிழமை மாலை கொடியிறக்கத்துடன் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நிறைவடையும்.

யாழ்.மாவட்ட செயலகம் கச்சதீவுக்கான பயண ஒழுங்குகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சட்டவரைபுக்கு...

கழக பிரதான நுழைவாயில் முன்பாக நேற்று பொது அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் மற்றும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபு தேவையில்லை என்பதை வலியுறுத்தி மக்களின் கருத்துக்கள் சேகரிக்கப்படுகின்றன.

இதன்போது பெருமளவில் பொது மக்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு தபால் அட்டைகளில் தமது கருத்துக்களைப் பதிவு செய்து வழங்கியிருந்தனர். (ம-7)

## பொலிஸார்...

யாழ்.மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன.

இதன்போது ஒரு வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கும் ஏனைய இரண்டு வழக்குகள் ஜூலை மாதத்துக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தனியார் காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டவிரோத விகாரையை அகற்றக்கோரி போராடும் மக்களுக்கு எதிராக பொலிஸார் இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர்.

தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம் நடத்தியதாக குற்றம் சாட்டி பிரதேச சபை தவிசாளர்கள், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக பலாலி பொலிஸாரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தனித்தனியாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இரு உழவு...

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி பயணித்த இரண்டு உழவு இயந்திரங்களைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்திய போதும் சமிக்ஞையை மீறி சென்றமையால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகவே இந்த சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது விசேட அதிரடிப்படை வீரர், உழவு இயந்திரத்தில் மோதுண்டு காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உழவு இயந்திர சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடமராட்சி...

இதனால் அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் மிகவும் கவனமாக தமது பயணங்களை மேற்கொள்ளுமாறு ஊர் மக்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக உரிய தரப்பிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் யானையை பாதுகாப்பாக பிடிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகிறது என ஊர் மக்கள் தெரிவித்தனர். (ம-7)

## தையி...

மையமாகக் கொண்ட தனியார் காணி உரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள சமூக, சட்ட, அரசியல் மற்றும் மனித உரிமை பரிமாணங்கள் மற்றும் இனத்துவ அரசு என்பவை தொடர்பில் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி. ம.திருவரங்கன், மூத்த சட்டத்தரணி கலாநிதி. கு.குருபரன், வலி. வடக்கு பிரதேச சபைத் சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் மற்றும் தையிட்டி விகாரையினால் நிலத்தினை இழந்த திருமதி. சா.சுகுமாரி ஆகியோர் குறித்த கலந்துரையாடலில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி.தி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், பொ. கஜேந்திரகுமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியாளர்கள், ஊழியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றுக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.02.27 — சீட்டிழுப்பு இலக்கம் 6118 — W 1 1 3 5 6 7
அத சம்பத — W 3 5 6 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0693
சுப தவசக் — திகதி 2026.02.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0234 — மேடம் 01 02 17 — 5325
தன நிதானய — திகதி - 2026.02.27 — சீட்டிழுப்பு இலக்கம் - 2148 — Q 01 16 19 81 Q
மெகா பவர் — திகதி 27/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2466 — N 09 22 28 41 72
ஜய — திகதி 2026.02.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0386 — T 7 5 5 0
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4360 — சீட்டிழுப்பு திகதி 27.02.2026 — Z 02 16 36 45 — Z
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.02.27 — சீட்டிழுப்பு இலக்கம் 1427 — சிம்மம் 10 30 41 61 சிம்மம்
சுபிரி டன சம்பத — 27.02.2026 — வெற்றி வாரம் 0826 — L 1 7 2 9 2 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,420,029.20
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3092 — சீட்டிழுப்பு திகதி 2026.02.27 — தினம் வெள்ளிக்கிழமை — 02 46 59 63 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 102,390,507.20
சனிதா — திகதி 27.02.2026 — வெற்றி வாரம் 5253 — 14 19 52 73 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,808,246.40
சசிரி — வெற்றி வாரம் 922 — சீட்டிழுப்பு திகதி 27.02.2026 — வெள்ளிக்கிழமை — 13 26 36 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,746,680.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4804 — சீட்டிழுப்பு திகதி 27.02.2026 — தினம் வெள்ளிக்கிழமை — 18 24 56 57 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,366,478.00
கப்ருக — X 11 05 15 31 63 — 2268 — 27.02.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.165,675,184.00
அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2918 — சீட்டிழுப்பு திகதி 2026.02.27 — 09 31 55 72 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,861,708.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

1. சுன்னாகம், இந்து, 1993, அனுசம், MBA, UK Electronic Engineering Moratuwa University மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57017).
2. மாதகல், இந்து, 1991, பரணி, Engineering (UK), Management officer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53670)
3. அச்சுவேலி - புத்தூர், இந்து, 1986, பூரட்டாதி, B.Eng electrical and Electronic (ICBT), Electrical Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51945)
4. உடுவில், இந்து, 1993, பூரம், B.Eng (Hons) in Civil and Structural, Project Engineer, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52945)
5. யாழ்., Roman Catholic, 1980, BBM, Manager, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (57444)
6. யாழ். Town, இந்து, 1994, திருவோணம், BSc in Mechanical Engineering, MSc (Canada), Mechanical Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54640).
7. பருத்தித்துறை, இந்து, 1981, கேட்டை, BSc in Network Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (53849).
8. தெல்லிப்பழை, இந்து, 1996, சித்திரை, Master of Business Management, Government Job, New zealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133).
9. யாழ்.Town, இந்து, 1991, உத்தரம், CIMA fully qualified, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(29780)
10. உடுப்பிட்டி, இந்து, 1995, மகம், Bechelor of Business Management, Banker மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56018)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

S.Sharma J.P — www.thaalee.com — 077 539 3728 — 077 992 1494 (2090)

---

## TECHNO WORLD
### தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

# A/L 2028

A/L தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 02.03.2026 (திங்கட்கிழமை)
நேரம் : காலை 9 மணி

A/L 2026, 2027 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு: 077 017 5346 (C-5073)

---

## NEC

பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்

# A/L 2028

கலை & வர்த்தகம் ஆரம்பம்

காலம் - 02.03.2026 MONDAY
நேரம் - காலை 09:30 மணி

தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

CONTACT FOR | 0765350999 | 0755350958 (C-5075)

---

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.திருநெல்வேலியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு நன்கு அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை.

தையல் இயந்திர இயக்குநர்
சம்பளம் : 30,000/= to 40,000/=
தையல் இயந்திர இயக்குநர் உதவியாளர்
சம்பளம் : 25,000/= to 30,000/=

தொடர்பு: 076 605 2532 (6922)

---

தமிழ் மொழி மூலம் / English Medium

## A/L 2028 கணக்கீடு

KBK ACCOUNTING

MR.BALAKAJEN SLTS
RESOURCE PERSON
B.com(Jaf), H.N.Dip.In.Acc(ATI), Dip.In.Edu(OUSL), M.com(Hons),Acc.spl

ஆரம்பம்
02.03.2026 திங்கள் 03.00 Pm

| Tamil Medium | English Medium |
|---|---|
| 03.00 - 04.00 Pm | 04.00 - 05.00 Pm |

புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2026, 2027

மாணவர்களுக்கு தேவையான புதிய நேர்சிகளுடன்

KBK
கந்தர்மடம் 077 452 0043 (C-5074)

---

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



| | |
|---|---|
| 10-19 Kg | 1000/Kg |
| 20-49 Kg | 900/Kg |
| 50Kg இற்கு மேல் | 800/Kg |

DELIVERY 2-3 Months

எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, புதுக்குடியிருப்பு, கேப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, கல்முனை, அக்கரை, வல்வெட்டித்துறை, கொழும்பு, கொக்குவில், மட்டக்களப்பு, கொக்குவில், சாவகச்சேரி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பூங்கா, நெல்லியடி

V2 TRAVELS 076 822 6244 076 455 0672 (C-5080)

---

## வரலாறு, கணிதம் குழு வகுப்புக்கள் (06 - O/L, A/L)

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான்.
(10 வருடக் கற்பித்தல் அனுபவம்)

T.P : 077 482 5438 (6939)

---

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பணி புரிவதற்கு அனுபவம் உள்ள Electrician, PC Operator மற்றும் அனுபவம் உள்ள CCTV Technician தேவை. (ஆண்கள்)

077 868 8517
076 892 8717 (2094)

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

---

## BEACON STUDY CENTRE

வதிரி — A/L 2028 — கரவெட்டி

கணித உயிரியல் தொழில்நுட்பம்

ஆரம்பம்: 02.03.2026
திங்கள் 1.00 மணி

077 888 4067
077 888 4068 (C-5076)

---

## வேலைவாய்ப்பு

- டிரைவர் வேலைவாய்ப்பு
  AD லைசன்ஸ் கட்டாயம்
  அனுபவம் முன்னுரிமை
- விற்பனைப் பிரதிநிதி
  Sales Representative (Rep)
  Two - Wheeler & Licence கட்டாயம்.
  விற்பனை அனுபவம் முன்னுரிமை.
  நல்ல தொடர்புத்திறன்

SUN Marketing PVT Ltd 076 139 1993 (2098)

---

## DCM

யாழ்.நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை — A/L 2028

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம்: 07.03.2026
காலை 8.00 மணி (சனி)

நிர்வாகம் : 077 778 9815 (C-5082)

---

## யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

2026.02.17ஆம் திகதி பத்திரிகையில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமானது இன்று 28.02.2026 தவிர்க்க முடியாத காரணத்தால் நடாத்த முடியாதுள்ளது.
இதற்குரிய மறு திகதி பின்னர் அறியத்தரப்படும்.

நிர்வாகம் (6938)

---

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 190/= | Max 5Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 10Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 230/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 185/= | |
| 1Kg கடலை | - 339/= | |
| 1Kg சோயா | - 250/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2750/= | |
| 1Kg குத்தரிசி ஆட்டக்காரி | - 255/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை | - 197/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 399/= | ~~480/=~~ |
| 01 மலிபன் பால்மா | - 1120/= | ~~1150/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 285/= | ~~330/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= | ~~70/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30 (2099)

---

## ACHIEVERS INSTITUTE

Navalar Road (Near Mampalam Junction)
மாம்பழம் சந்தி அருகாமை
தொ.பே: 077 828 0900, 070 537 6940

# A/L-2028

Tamil and English Medium

SCIENCE பிரிவு மாணவர்களுக்கான மாலைநேர GROUP CLASSES

ஆரம்பம் : 30.03.2026

5 வருடத்துக்கு மேல் Paper Marking (A/L Final) அனுபவம் வாய்ந்த எமது ஆசிரியர் குழாம்

- PHYSICS (Theory & Model Paper) T.Muruganirojan
- CHEMISTRY K.Mugunthan
- BIOLOGY S.Shivarangan
- PHYSICS (Past Paper) A.Arunraj
- Combind Maths T.Koneshwar

யாழ்.பிரபல பாடசாலை ஆசிரியர்கள் (C-5081)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.